2002 மார்ச் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமாவளவன் அவர்கள் அதைப் பற்றிப் பேசப் போகிறார். அதற்கான பதிலை முதலமைச்சர் சொல்வார்கள். மாண்புமிகு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

3. அறிக்கை அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பதினான்காவது முதல் பதினெட்டாவது வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பில் பேரவைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு அறிக்கை ஒன்றை வழங்குவார்கள்....

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

சட்டக் கல்லூரி மாணவர்களின் உண்ணாவிரதம்—தொடர்ச்சி.

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவருடைய அனுமதியில்லாமல் பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். என்னிடத்திலே வந்து கேட்டீர்கள். நான் விளக்கம் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) அமருங்கள். (குறுக்கீடுகள்) திருமாவளவன் என்பவர் உங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர், உங்கள் கட்சியின் சார்பாகப் பேசப் போகிறார். அதற்கு முதலமைச்சர் தன்னுடைய பதிலுரையிலே விளக்கம் சொல்வார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, உட்காருங்கள். உங்கள் பிரச்சினைக்குத்தான் பதில் வருகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.